30.06.2025

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.25/2011</u>

<u>பி.வா.சா. 1–பாரத் த–பெ முத்துக்குமார்</u>

<u>**IA** 7/2025 **IA** 8/2025 தேதியிட்ட உத்தரவு படி சாட்சி மீண்டும்</u>

<u>அழைக்கப்பட்டு வாதி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தற்போது சாட்சியிடம் காட்டப்படும் ஆணை உறுதி ஆவணத்தில் உள்ள பாரத் என்ற கையொப்பம் என்னுடையது தான் என்றால சரிதான். அசல் வழக்கு எண்.35/2016 வழக்கில் நானும், அர்ஜுனனும் என்பவரும் அவ்வழக்கிக்ல தரப்பனிராக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அது வாதி தரப்பு சான்றாவணம் 14 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சொத்தை கிரையம் பெறுவது சம்பந்தமாக முத்துலிங்கம் என்பவரிடம் கிரையஒப்பந்தம் செய்து கொண்டு அவர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுக்கு எதிராக மாண்புமிகு துறையூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான். எனவே இந்த வழக்கின் முந்தைய விசாரணையில்

30.06.2025

எனக்கு எதிராக எந்த வழக்கும் இல்லை என தவறாக சாட்சி அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் நான் தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு இல்லை என்று தான் முந்தைய விசாரணையில் சாட்சி சொன்னேன்.

/உண்மை நகல்/

ஒம்/-திரு.T. அன்பு,

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

துறையூர்.